

யாழ் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும்

லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர். திரு. **விஸ்வலிங்கம் சிவச்செல்வம்**

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவுமலர்

**24.04.2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அப்பாவுன் இன்னுயிர் பிரிகையிலே
என்னவெல்லாம் சொல்ல எண்ணி இருந்தாயோ
உம் கனவை நனவாக்க உள்ளவரை நாம் வாழ்வோம்
உம் பெயர் சொல்ல வைக்கும் உலகமொன்றை
நாம் காண்போம்

உம் மறைவைத் தாங்காமல் உள்ளம் நோகிறது
எண்ணும் போதெல்லாம் ஏக்கம் நிறைகிறது
அப்பாவின் ஆத்மா அரனடியில் சாந்தி பெற
எப்போதும் பிரார்த்திப்போம் என்றுமே
நாம் மறவோம்

களங்கமற்ற அன்பு செய்த கருணைத் தெய்வமே – உன்
காலடியில் இம்மலரைக் கரம் கூப்பி வைக்கின்றோம்
அர்ப்பணிக்கும் இம்மலரை அப்பாவே எங்களது
சமர்ப்பணமாய் ஏற்றிடுக சாந்திக்காய் வேண்டுகிறோம்.

இப்படிக்கு
மனைவி. மக்கள்.
குடும்பத்தினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் திரு விஸ்வலிங்கம் சிவச்செல்வம்



அன்னை மடியில் 01. 01. 1961

இறைவன் அடியில் 27. 03. 2016





## திதி வெண்பா

ஆண்டு மன்மத அமைந்த பங்குனித் திங்கள்
பூண்ட அபரபக்க சதுர்த்தி தனில் - மாண்பு
விஸ்வலிங்கம் மைந்தன் சிவச்செல்வம் காசி
விஸ்வநாதன் பாலடைந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

## தேவாரம்

கூற்றாயினவாறு விலக்கலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவ என்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி கைம்படியே
குடரோடு துடக்கி முடக்கிடர்
ஆற்றேனடியே னதிகைக் கெடில
வீரட்டானத்துறையம்மானே

## திருமுருகாற்றுப்படை

அஞ்சுமுகந் தோன்றி லாறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகா னினைக்கின் லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனேஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
கரிகுழற் பணமுலை மடந்தை
பாதியேபரனே பால்கொள்வெண்ணீற்றாய்
பங்கயத்தயனு மாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையின்
நிறைமலர்க் குருத்தமேவியசீர்
ஆதியே அடியேனாதரித் தழைத்தால்
அதெந்துவேயென்றருளாயே

## திருவிசைப்பா

ஒளிவளர்விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக்கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோகமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே

## திருமந்திரம்

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதிதானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திரு. விஸ்வலிங்கம் சிவச்செல்வம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

எழில்மிகு இலங்கைத்திரு நாட்டிலே வரலாற்றுப் பெருமைமிக்க யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் அமைந்துள்ள சப்த தீவுகளில் ஒன்றாகிய லைடன் தீவில் அமையப் பெற்ற நாரந்தனை என்னும் அழகிய கிராமத்தில் சைவ வேளாளர் குலத்தில் விஸ்வலிங்கம் உத்தமிப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது புதல்வனாக 01.01.1961ல் சிவச்செல்வம் அவர்கள் பிறந்தார்.

இவரது அன்புச் சகோதரர்களாக உதயச்செல்வம், கலாமதி, மனோகரச்செல்வன், கலைச்செல்வன் அவர்களும் விளங்கினார். தனது ஆரம்பக்கல்வியை நாரந்தனை கணேச வித்தியாலயத்திலும் இடைநிலை, உயர்நிலைக்கல்வியை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் பயின்றார். கல்வி கற்கும் காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கியதோடு தனது பெற்றோர்களுக்கு விவசாய வேலைகளிலும் உதவி செய்வதோடு தங்கை தம்பிமார்களுக்கும் பெரிதும் உறுதுணையாக இருந்தார்.

உயர்கல்வியைத் தொடர்ந்து தனியார் தொழிற்சாலையில் தொழில் புரிந்தார். தொழில் செய்யும் காலத்தில் பெற்றோர் சகோதரர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளையும் குறைவின்றிச் செய்து வந்தார்.

நாட்டின் அசாதாரண நிலைமை காரணமாக தம்பி, தங்கையுடன் இந்தியா சென்று சிறிது காலம் தங்கி கோவில் வழிபாடுகளிலும் கலந்து கொண்டார். அன்னையுடன் சேர்ந்து வாழ்வதற்காக கொழும்பு சென்று உறவினரின் வர்த்தக நிலையத்தில் வேலை செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் மைத்துனர்களாக திருநாமசண்முகம், மைதிலி,தர்சினியையும் மனைவி வழியாக ராஜகுலசிங்கம், தர்மகுலசிங்கம், காலம் சென்ற பிறேமகுலசிங்கம், மங்கையற்கரசி, மங்கையர்திலகம் ஆகியோரும் வாய்த்தனர். தனது தாயாரையும் இரண்டு தடவைகள் பிரித்தானியா அழைத்து பேரக்குழந்தைகளுடன் கொஞ்சிக் குலாவி மகிழச் செய்தார்.

2012ம் ஆண்டில் தனது மனைவி குழந்தைகளுடன் தாய் நாட்டிற்குச் சென்று அங்குள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களை தரிசனம் செய்ததோடு உறவுகளையும் நண்பர்களையும் சந்தித்து அகமகிழ்ந்தார். எப்படியெல்லாம் வாழ வேண்டுமோ அப்படியே நல்ல பண்பாளனாய் வையத்துள் வாழ்ந்து வரும் வேளை திடீரென 27.03.2016ல் சிவபதமடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்திக்காக அனைவரும் இறைவனை பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி ! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

உங்களைக் கைபிடித்த நாளிலிருந்து இது வரைக்கும் எனக்காகவும் பிள்ளைகளுக்காகவும் தலைவனாய் இருந்து மழை என்று பாராமல் குளிர் என்றும் பாராமல் எங்களுக்காக அல்லும் பகலும் பாடுபட்டீர்களே. இப்ப எங்கப்பா நீங்கள்? பிள்ளைகளிடம் வந்து அம்மா எங்க ஹம்சி, அம்மா எங்க என்று தேடுவீர்களே, இனிமேல் தேடமாட்டீர்களா? நான் கேட்காமலே எனக்கு எல்லாம் வேண்டித் தந்து வியப்பூட்டுவீர்களே? ஏன் அப்பா எங்களை ஏமாத்திவிட்டுப் போட்டீர்கள். ரமணி, ரமணி என்று அடிக்கடி கூப்பிடுவீர்களே இனிமேல் கூப்பிடமாட்டீர்களா? எங்களை எல்லாம் கலங்கவிட்டு கனதூரம் போய் விட்டீர்களே? வீட்டுக்கு ஒரு தலைவனாகவும் எனக்கு அன்பான கணவனாகவும் இருந்து எனக்கு வேண்டியதை எல்லாம் தயங்காமல் செய்வீர்களே அப்பா. நீங்கள் இல்லாமல் வீடு கண்ணீரில் மிதக்கிறது. அப்பா உன் காலடி ஓசையும் கதவு சாத்தும் சத்தமும் இன்னமும் கேட்குது அப்பா. அப்பா நீ. வேலைக்கும், கடைக்கும் போய்விட்டு வருவீர்களே அதே போல் இப்பவும் போய்விட்டு வருவீர்கள் என காத்திருக்கின்றேன். அப்பா, அப்பா நீ இல்லாமல் நான் என்ன செய்வன் தாங்க முடியலை அப்பா. அப்பா நீ திரும்பி வர மாட்டியா வாவன் அப்பா. வீட்ட உன்ர ரமணி உனக்கு பிடித்த சாப்பாடு செய்து வைத்திருக்கிறேன். அப்பா நீ வா? நீ வரணும். நான் உனக்காகக் காத்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் கிரிசானின் புலம்பல்

எனது ஆசை அப்பா எங்கே சென்றுவிட்டீர்கள்? வீட்டில் உங்களைக் காணவில்லை. அம்மா அழுதுகொண்டிருக்கிறா.எனக்குப் பயமாக இருக்கு. அப்பா! வீட்டை அப்பா நீங்கள் வரமாட்டீர்கள் என்று எல்லோரும் சொல்கின்றார்கள். அது உண்மையா? நீங்கள் இனிமேல் வரவே மாட்டீர்களா அப்பா? அப்பா எனக்கு பாடசாலைக்கு கப்பல் செய்து தந்தீர்களே அதே போல் இப்பவும் வேணும் அப்பா செய்து தர மாட்டீர்களா? பாடசாலை விடுமுறை நாட்களில் வெளி இடத்திற்கு எங்களை கூட்டிச் செல்வீர்கள் இனிமேல் எங்களோடு கூட வரமாட்டீர்களா? கிரிசான் அப்பா கடைக்கு போறன் என்று கேட்பீர்களே? இனிமேல் கேட்கமாட்டீர்களா? எனக்கு விளையாட வகை வகையாய் விளையாட்டுப் பொருட்கள் வேண்டித் தந்தீர்களே இனிமேல் அக்காக்கும் எனக்கும் யார் அப்பா வேண்டித் தருவார்கள் அப்பா? வாங்கப்பா வீட்டை நீங்கள் வருவீர்கள் என வாசலைப் பார்த்திருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் ஹம்சிதாவின் புலம்பல்

என் அன்பு அப்பா! நீங்கள் எங்களை விட்டு எங்கு சென்றீர்கள். நீங்கள் இல்லாமல் நாங்கள் தவிக்கிறோம். நான் குழந்தையாக இருக்கும் பொழுது என் கைபிடித்து கவனமாகக் கூட்டிச் சென்றீர்கள். ஒவ்வொரு பொருளினது தமிழையும் எனக்கு கற்றுத் தந்தீர்கள். நான் விளையாடுவதற்கு விதம்விதமான பொருளை வேண்டித் தந்து என்னை சந்தோசப்படுத்துவீர்கள். எனது பாடசாலைக் காலங்களில் தரும் அனைத்து வீட்டுப் பாடங்களிலும் பெரும் உதவியாக இருந்து, இரவிரவாக கண் விழித்து அதை வடிவமைத்து தந்துதவிய என் செல்ல அப்பா எங்களை விட்டு ஏன் சென்றீர்கள் ? இனிமேல் அதையெல்லாம் எங்களுக்கு யார் செய்து தருவார்கள்? அப்பா நீங்கள் எனக்கு சைக்கிள் வேண்டித் தந்து சைக்கிள் ஓட்டம் பழக்கி, நான், தம்பி, நீங்கள் மூவரும் சேர்ந்து கடைகளுக்கு எல்லாம் போய் வருவோமே! எவ்வளவு சந்தோசமாக இருக்கும். ஆனால் இப்ப நீங்கள் எங்களை விட்டு விட்டு எங்கேயப்பா போய்விட்டீர்கள்? நானும் தம்பியும் சைக்கிளோடு காத்திருக்கிறோம். நீங்கள் வரமாட்டீர்களா? நாங்கள் என்ன பொருளை ஆசைப்பட்டாலும் அதை உடனே வேண்டி தருவீர்களே! எனக்குப் பிடித்த அழகு சாதனப் பொருட்களை நான் கேட்கும் பொழுது நீங்கள் அதை சலிக்காமல் வாங்கித் தருவீர்கள்.ஒவ்வொரு நாளும் மாலையாகியவுடன் அப்பா வருவார் என வாசலைப் பார்க்கின்றேன். ஆனால் நீங்கள் வரவில்லை. எங்கே சென்றீர்கள் என் ஆசை அப்பா? நீங்கள் வேண்டித் தந்த பொருட்கள் எல்லாம் இருக்கு. ஆனால் உங்களை மட்டும் காணவில்லை. அப்பா ஹம்சி, ஹம்சி என்று அடிக்கொரு தடவை கூப்பிடுவீர்களே இப்ப கூப்பிடமாட்டீர்களா? அப்பா உங்களுக்காக பார்த்திருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அண்ணி! அண்ணி!** என்று அண்ணியுடன் மனதில் உள்ளதை கதைப்பீர். உம் வருத்தம் பற்றி மட்டும் ஏன் கதைக்கவில்லை. யார் மனதையும் புண்படுத்தக்கூடாதுஎன்று நினைத்தீர்களோ சந்திரன்.

லண்டன் சித்தப்பா, சித்தி என்று உரிமையோடு உறவுகொண்ட லக்சன் ஜாமளையும் அண்ணியும் உங்கள் பிரிவால் கதிகலங்கி நிற்கின்றனர்.

பலமான குடும்பமென்று பெருமையுடன் இருந்தோம். நண்பர்கள் உறவுகள் எல்லோரும் தவிக்கின்றனர். உம் இறப்பை நம்பவே முடியவில்லை ஐயா. இன்னும் எங்களோடு ஒருவனாக நீங்கள் இருப்பதாகவே எண்ணுகிறோம். ஏனப்பா அற்ப ஆயுளில் எங்களை எல்லாரும் விட்டு போய் விட்டாய். உன் பிரிவால் தவிக்கின்றோம்.

அம்மாதான் அழைத்தாவா? அல்லது அம்மாவிடம் செல்ல நினைத்தாயா? எதுவாக இருந்தாலும் உம் குடும்பமும் நாமும் கதிகலங்கி நிற்கிறோம். எங்கிருந்தாலும் உமது ஆசியை குடும்பத்துக்கு வழங்கிடும் ஐயா உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

அன்பு அண்ணா
உதயச்செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தங்கை புலம்பல்

தமையனாகக் கூடிப் பிறந்தாயே
தங்கச்சி என்னடியென அன்பாக அழைப்பாயே
நேசக்கரம் நீட்டி எம்மை நேர்வழியில் செல்ல வைத்தாய்
அன்னையின் இடத்தில் அரவணைத்த அண்ணாவே,
அங்கு இலண்டனில் வாழ்கின்றாய் என்று
இங்கு எண்ணியே அகமகிழ்ந்து வாழ்ந்தேன் நான்
கைபிடித்து எமையெல்லாம் வழிநடத்திய தெய்வமே
காலனுனைக் கவர்ந்தது கேட்டமுதல் கதறுகின்றேன்
ஒட்டி உறவாட நீ எங்கே அண்ணா,
ஆயிரம் காலம் வாழ் ஆலமரம் நீ அண்ணா
தங்கச்சி என அழைத்த குரல் இடைநடுவே அடங்கியதோ
நோக்கும் இடமெலாம் உன்முகம் தெரிகிறது
இறுதியில் உன்முகம் காணாது துடிக்கின்றேன்,
என்ன கேட்டாலும் எதுக்கென்று கேட்காமல்
ஓடோடி வந்து அள்ளித் தருவாயே
உன்னை அழைக்கின்றேன் வாராயோ என் அண்ணா
அலறுகிறேன் ஆசை அண்ணா – ஆயினும்
ஆறுகிறேன் உன் ஆத்மா சாந்திக்காய்.

பிரிவால் வாடும்
தங்கை கலாமதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாதபாடுபட்டு சேர்த்து வைத்தீர்கள். எங்கள் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் குடும்பத்தோடு சேர்ந்து வந்து குழந்தைகளோடு மகிழ்ச்சியாய் இருந்தீர்களே சந்திரன் அண்ணா, இன்று மட்டும் எங்களை துடியாய்த் துடிக்கவிட்டு சென்ற காரணம் தான் புரியவில்லை.

அம்மா சகோதரர் பிள்ளைகள் மேல் பாசத்தை கொட்டினீர்களே. அம்மாவை இருமுறை அழைத்து ஆசைமுத்தம் பெற்றீர்கள். பெரியண்ணா, அண்ணி பிள்ளைகள் உறவுகளை இலங்கை சென்று பார்த்து உறவு கொண்டு வந்தீர்கள். தங்கச்சி மச்சான் பிள்ளைகளைக் கான ஜேர்மன் சென்று வந்தீர்கள்.

எவ்வளவோ செய்ய வேண்டும் என திட்டங்கள் போட்டீர்கள். ஏன் தான் பாதியிலே எங்களைக் கைவிட்டீர்கள். அம்மா அப்பாவின் அழைப்பு உங்கள் காதில் எட்டியதோ சந்திரன் அண்ணா.

அடிக்கொரு தடைவை பெரியப்பா பெரியப்பா என்று ஆசையுடன் அழைக்கும் பிரதீசன், பிரவீன் இருவரும் சந்திரன் பெரியப்பாவின் குரலைக் கேட்காமல் அழுது புலம்புகின்றனர். தர்ஷினியும் முழுமையாய் கதைக்க முடியவில்லையே என புலம்புகின்றார். உங்கள் குழந்தைகளும் மனைவியும் உங்கள் பிரிவை பிரிவு என்ற எண்ண முடியாமல் பிடியாய் நிற்கின்றனர். எல்லாக் குழந்தைகளையம் அணைத்திடுவீர்கள் பாசப்பேச்சினாலே.

சந்திரன் அண்ணாவே! உங்கள் பிரிவை தாங்க முடியாமல் தினம் தினம் துடிக்கின்றோம். நீங்கள் அம்மாவிடம் சென்றாலும் உங்கள் அனைவரதும் ஆசியை வேண்டி இறைஞ்சுகிறோம்.

தம்பி,
யோகன் (கலைச்செல்வன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**My first** fast food, My first cellphone, My first laptop, My first watch, the best toys have one thing in common. I got themfrom you. You were my uncle and a good friend. You have showed me how to travel without a car. On the playground you were the one who showed me how to swing. You never gave up. When I was falling from the swing you told me to stand up and try again. You helped me the second time.

I miss you so much. I wish I had some more time to spend with you. I have a car license now but you're not here a car license now but you're not here anymore. I wanted to show you how I can drive, that was one of my wishes.

I hope you are at the same place like grandma. A very peaceful place, a place without fear and anger.

**Warzana.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண் கண்டதை கை செய்யும் வல்லமையாளர்

ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் தீவகம் வடக்குப் பகுதியின் இந்துசமய நெறி தவறாது வாழ்ந்துவரும் மக்களைக் கொண்ட நாரந்தனைக் கிராமத்தின் வடக்குப் பகுதியில் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய சூழலிலே ஆலயத்தின் தென்கிழக்கு மூலையிலே சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தவர்கள். அமரர்களான திரு திருமதி விசுவலிங்கம் குடும்பத்தினர்,திருமதி பராசக்தி விசுவலிங்கம் அவர்கள் இலங்கையின் வடமேற்கு மாகாணத்தில் அமைந்துள்ள உடப்பு எனும் கிராமத்தில் ஆசிரியையாகப் பணிபுரிந்த காலத்தில் அவர்களுக்கு இரண்டாவது புதல்வனாக சிவச்செல்வன் பிறந்தார். இவர் பிறந்து ஓரிரு ஆண்டுகளில் அவரது தாயார் இடமாற்றம் பெற்று நாரந்தனையில் கல்வி கற்பிக்கலானார்.

அமரர் சிவச்செல்வன் சிறுவயது முதல் மிகவும் துடியாட்டமான சிறுவனாகத் திகழ்ந்து வந்தார். தனது தகப்பனாருடன் சேர்ந்து தமிழ்ப் பண்டிகையின் போது பட்டாசு கொழுத்தி தனது கண்ணையும் காயப்படுத்திக் கொண்டார். அவரின் பெரிய தாயாரான காலம் சென்ற எமது தாயாருடன் மிகவும் பாசமுடையவராக இருந்தார். எங்கள் குடும்பத்தில் சகோதர, சகோதரிகள் பலபேர் இருந்தபோதும் எங்களில் ஒருவராக படிப்பிலும், விளையாட்டிலும், தோட்டவேலைகளிலும் கலந்து கொள்வார். எமது குடும்பத்தினரின் சகல வைபவங்களிலும் தன்வீட்டு வைபவம் மாதிரி முன்னின்று நடத்திவைப்பார்.

அமரர் சிவச்செல்வன் கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள எவர்சில்வர் தொழிற்சாலையில் வினைத்திறன் மிக்க ஊழியராகத் திகழ்ந்து பலரின் பாராட்டைப் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பிரித்தானியாவிற்குச் சென்ற காலம் முதல் எங்களுடன் தொலைபேசியில் அடிக்கடி தொடர்பு கொள்வார். பிரித்தானியாவில் அவர் வாழும் பகுதியில் குடியேறிய சகல தமிழ்மக்களுக்கும் சகல உதவிகளையும் இறுதிவரை செய்து வந்தவர் திடீரென இளவயதில் இறைவனடி சேர்ந்து விட்டார் என்ற செய்தி கேட்டு நாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்தோம். என்ன செய்வது. விதி இதுவென்றால் யார் என்ன செய்ய முடியும். அன்னாரின் இறப்பு அவரது இளம் குடும்பத்தினரின் பேரிழப்பாகும். அவர்கள் துயர்நீக்கி அமைதி பெறவும், அமரர் சிவச்செல்வனின் ஆத்மா சாந்தி பெறவும் இறைவனை வேண்டுவோம்.

பெரிய தாயார் பிள்ளைகள்
(அவுஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, யாழ்ப்பாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு நிறைந்த சிவாண்ணை,

நீங்கள் பிரிந்ததை நினைத்து நாங்கள் கலங்கித் தவிக்கிறோம்.முரளி, முரளி என்றும் தக்சா, தக்சா என்றும் அடிக்கடி கூப்பிடுவீர்கள். இனிமேல் எங்கள் வீடு தேடி வரமாட்டீர்களா? எங்களுக்கு ஒவ்வொரு பகிடி சொல்லி சேர்ந்து சிரிப்பீர்களே? இனிமேல் அந்த நாள் திரும்பி வராதா? சிவாண்ணை எங்களைக் கலங்கவிட்டு எங்கே சென்றீர்கள்? ஏன் சிவாண்ணை சொல்லாமல் சென்றீர்கள்? திடீரென மறைந்ததன் காரணமென்ன? ஊரில் ஒரு சுனாமி வந்த மாதிரி இருக்கு. அன்புச் சிவாண்ணாவை நாங்கள் எல்லாரும் இழந்திட்டோம். எங்க சிவாண்ணை போய் விட்டீர்கள்? திரும்பி வரமாட்டீர்களா? ஊருக்கு எல்லாம் உதவி செய்துவிட்டு எல்லாரையும் எல்லாரையும் பரிதவிக்க விட்டு விட்டு போய் விட்டீர்களே? உங்கள் வீடு தேடி வந்தால் கொஞ்ச நேரம் இருங்கோ என்று அடிக்கடி கூறி திரும்பப் போக விடாமல் பண்ணுவீர்களே. ஏன் சிவாண்ணை இப்படி நீங்கள் எங்களை விட்டுப் போவதற்காகவா இவ்வளவு அன்பு காட்டினீர்கள். தாங்க முடியவில்லை. சிவாண்ணை உங்களுக்காக உங்கள் குடும்பத்தோடு காத்திருப்போம். நீங்கள் வருவீர்கள் என்று.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
முரளி குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்புள்ள தாத்தா

குடும்பத்தின் தலைவனாய்
குன்றிலிட்ட தீபமாய் அன்பின்
பிறப்பிடமாய் வாழும் காலமெல்லாம்
வளம் தந்து வழிகாட்டி மாசற்ற
அன்பு தந்து மகிழ்வுடனே
வாழவைத்து சிறப்பாக பிள்ளைகளை
வளர்த்து விதியின் வலிமையால்
ஈற்றில் விண்ணில் நட்சத்திர
மாகிய எம் ஆருயிர் குலதெய்வத்தின்
நினைவலைகளை எங்கள் இதயங்களில்
சுமந்த வண்ணம் இம்மலரினை
அவர்தம் பாதங்களில் பாசத்துடன்
காணிக்கை யாக்குகின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!

என்றும் நீங்கா நினைவுகளுடன்
பேரன் பகலவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அமரர் திரு. வில்வலிங்கம் சிவச்செல்வம் மறைவின்போது ஓடோடி வந்து ஆறுதல் கூறி உதவியோரக்கும், தொலை பேசி தொலைநகல் ஊடாக ஆறுதல் கூறியோர்க்கும்,

பத்திரிகைகளில் அனுதாபச் செய்தி வெளியிட்டோர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோர்களுக்கும், இறுதியாத்திரையின்போது கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

மேலும் இன்று நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வுகளில் கலந்து கொண்டோருக்கும், இம் மலருக்கு ஆக்கம் தந்தோருக்கும் கிரியைகளை சிறப்புற நடாத்தி அந்தணர்களுக்கும், இம்மலரை அச்சேற்றித் தந்த ஜே.ஆர் அச்சகத்தாருக்கும், மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படிக்கு,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**



Designed & Printed @ JR Print-London www.jrprint.com T : 0208 503 6643
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org